உ

சிவமயம்.

குமரன்.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின். (திருவள்ளுவர்.)

சதங்கை க. | காரைக்குடி துந்துபி௵ ஆவணிமீ | மணி ச.

வணக்கம்.

முருகக்கடவுள்.

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு
வெற்பனைச் செஞ்சுடர் வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித்
தோனை விளங்கு வள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக்
கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா
தவர்க் கொரு தாழ்வில்லையே.

—அருணகிரிநாதர்.

சிவபெருமான்.

பூவில் வாசத்தைப் பொன்னினை மணியைப்
புவியைக் காற்றினைப் புனலனல் வெளியைச்
சேவின் மேல்வருஞ் செல்வனைச் சிவனைத்
தேவ தேவனைத் தித்திக்குந் தேனைக்
காவியங் கண்ணி பங்கனைக் கங்கைச்
சடையனைக் காமரத் திசை பாட
நாவி னூறு நள்ளாறனை யமுதை
நாயினேன்மறந் தென்னினைக் கேனே.

—சுந்தரர்.

திருமால்.

அருமறை முதல்வனை யாழி மாயனைக்
கருமுகில் வண்ணனைக் கமலக் கண்ணனைத்
திருமக டலைவனைத் தேவ தேவனை
இருபத முளரிக ளிறைஞ்சி யேத்துவாம்.

—வில்லிபுத்தூராழ்வார்.

குமரன்.

வேதபாடசாலைகள்.

ஹிந்து சமயங்கட்கு உயிராயிருப்பது வேதங்களே யாகும். வேதங்களில் மக்கள் எவ்வளவு பக்தி வைத்திருக்கிறார்களோ அவ்வளவுதான் நமது சமயம் ஜனங்களிடையில் உரம் பெற்றிருக்கும். வேதத்தை நம்பாதவனும், அதற்கு மரியாதை செலுத்தாதவனும், அதிற் குற்றங் கூறுபவனும் ஹிந்துசமயங்கட்குப் புறம்பானவனே யாவன். எத்தனைப்புறச்சமயங்கள் வந்து முன்னும் பின்னுமாக மோதினும் அசையாது தந்நிலையில் நின்று ஞானச்சுடர் கொளுத்துவது நமது வேதங்களே யாகும். தோற்றமும் முடிவுமில்லாத—நிரந்தரமான—ஆழத்தை யறிய முடியாததான—வற்றாத செல்வமான நமது வேதத்தைப் பலரும் படித்துப் பயனறிந்துய்வதற்குப் பெருமுயற்சி செய்யப்பெறுதல் வேண்டும்.

இளஞ்சிறார்க்கு உணவளித்து வேதத்தைக் கற்பித்தல் சிறந்த தருமமென்று குறிக்கப்பெற்றிருக்கிறது. இம்முறையானது, பிரமசரிய ஆச்ரமம் முறையோடிருந்த காலத்தில், குருவினது ஆச்ரமங்களில் அல்லது அவர்கள் வீடுகளில் அநுட்டிக்கப்பெற்றது. இப்பொழுது அம்முறை மறந்து போயினமையின் தனித்தனியே குடும்பப் பெரியார்களால் தங்கள் மக்களுக்கும் ஏகதேசத்தில் பிறர் குழந்தைகட்கும் வேதமோதுவிக்கின்றனர். தவிர வேதத்தைப்பலர்க்குப் பயில்விக்கவேண்டுமென்ற நன்னோக்கங்கொண்ட செல்வவான்கள் பலவிடங்களிலும் வேதபாடசாலைகளை நிறுவியிருக்கின்றனர். இவைகளிற் பெரும்பாகம் நாட்டுக்கோட்டையாராலேயே ஸ்தாபித்து நடத்திவரப் பெறுகின்றன. இந்த ஸ்தாபனங்கட்கு பல்லாயிரக்கணக்காக மூலதனம் தொகுக்கப்பெற்றிருக்கின்றது. அங்கு பயிலும் மாணவர்கட்கு உணவும்

உடையும் பிறவும் செவ்வனே அளிக்கப்பெறுகின்றன. இந்நிலை செய்தும் பெரும்பயன் விளையவில்லை. ஒரு பாடசாலையிலாவது போதிய பிள்ளைகள் படிப்பதாகக் காணவில்லை. படிப்பதற்குப் பிள்ளைகளின்மையால் பல பாடசாலைகள் நிறுத்தப்பெற்றிருக்கின்றன. இன்னும் சில நிறுத்தப்படுந் தருவாயிலிருக்கின்றன வென்பதை நாமறிவோம். குடிக்கக் கஞ்சியும் உடுக்க உடையுமில்லாதவர்கள்கூடத் தங்கள் பிள்ளைகளை வேதபாடசாலைகட்கனுப்ப விரும்புகின்றார்களில்லை. என்ன பாடுபட்டும் வேதத்தைப் பயில வேண்டிய பிராமண மாணவர்கள் உண்டி உடை முதலிய சௌகர்யங்கள் யாவுங்கொடுத்து வருந்தியழைத்தாலும் படிப்பதற்கு வரவில்லையென்றால் மிகுந்த சமயபக்தியுள்ள ஹிந்து மனம் எவ்வாறு வருந்தும்? சமய பக்தியில் தலைசிறந்து நிற்கவேண்டியவர்களும், வேதத்தை ஏனையோர் படித்தலில் விருப்பமில்லாதவர்களுமான பிராமணர்களின் குழந்தைகள் ஏன் வேதபாடசாலைகளில் வேதம் பயில விரும்புவதில்லை யென்பதை சமயாபிமானிகள் ஊன்றி யோஜித்தல் வேண்டும். மறுமை யின்பத்தைத் தரவல்லதும் மனிதப்பிறப்பின் பயனை யடைவதற்குத் துணைசெய்வதும், ஹிந்துக்களின் ஜீவதாதுவாக விளங்குவதும், பிச்சைபுக்குண்டாவது கற்கவேண்டியதுமான திவ்ய வேதத்தை ஒரு சிரமுமின்றிப் பயில்வதற்குப் பிள்ளைகள் கிடையாமற் போனமைக்குக் காரணமென்னை?

இரண்டு நூற்றாண்டுகட்கு முன்னர் நமது மக்களால் விரும்பப்படாததும், அதனைப்படிப்பதால் ஹிந்துக்களின் லக்ஷியமான மோக்ஷ உலகிற்குச்செல்ல எவ்விதத்தும் உதவி புரிய முடியாததும், கேவலம் இந்த உலகத்தில் டம்பம் மாத்திரமாக முடிவதுமான தற்கால ஆங்கிலக்கல்வி கற்பதற்கு வேதப்பிராமணக் குழந்தைகள் பறந்து செல்வதற்குக் காரணமென்னை? சொந்த நலத்தைப்பேணாமலும், நாளை யுண்பதற்குப் பொருள் வைத்துக்கொள்ளாமலும், பரோபகாரம், தர்மநிர்த்தாரண மென்பவற்றைப் புரிந்து உலகவாழ்க்கையைக் காப்பாற்றும் கடமையைக் கொண்ட பிராமணர்கள், ஏன் தங்கள் குழந்தைகளை விருப்போடு ஆங்கிலக்கலாசாலைகட் கனுப்புகின்றார்கள்? கையில பொருளில்லையாயினும்

கடனாளியாயிருப்பினும் இன்னும் கணக்கற்ற பொருளைக் கடன் வாங்கியாவது வீடு நகை முதலியவற்றை ஈடு வைத்தாவது பொருள்பெற்றுச் செலவு செய்து ஆங்கிலங்கற்பித்தன் ரஹஸ்ய மென்னே? உயிரைக்கொடுத்தாவது தமது சமயத்தைக்காப்பாற்றப் பிறந்திருக்கும் பிராமணர்கள், தமது வேதத்தை உண்டியும் உடையும் பெற்றுப் படிப்பதற்கு விரும்பாமல் கிறிஸ்தவமதப் புத்தகங்களைப் படித்தாலும் படிக்கட்டுமென்றுகருதி அதிகமான சம்பளத்தையும் கடன்வாங்கிக் கொடுக்க ஏன் முன் வருகின்றனர்?

சமயாபிமானிகளே! இந்தஇடந்தான் நாம் ஊன்றிக்கவனிக்க வேண்டிய இடமாகும்! வியாதிக்குத் தக்க மருந்து கொடாமல் வேதத்தின் பெருமையைப் பற்றியாவது சமய உண்மைகளைப்பற்றியாவது பேசுவதிலும், பிற பாஷைகளையாவது பிற சமயங்களையாவது இகழ்ந்து கூறுவதிலும் ஒரு பயனும் விளையப்போவதில்லை. விரும்பத்தகுந்ததை வெறுத்து, விரும்ப வேண்டாததை விரும்புதற்குக் காரணம் வேறொன்றுமில்லை. இம்மையில் நினைத்ததையெல்லாம் ஆக்கவல்ல பொருள்வருவாயொன்றே இதற்குக் காரணமாக நிற்கின்றது. ஆங்கிலங்கற்றால் அவன் எப்படியாவது இந்த உலகத்தில் பொருள் சம்பாதித்துவிடலாமென்ற நம்பிக்கை அநுபவ பூர்வமாக ஜனங்களிடையில் பரவிக்கிடக்கின்றது. வேதாத்தியயனஞ்செய்தவர்கள் பொருள் வருவாயின்றித் தவிக்கின்றனர். எப்போதும் இவர்கள் பிறரிடம் யாசகம் செய்தே குடும்ப காலக்ஷேபஞ் செய்யவேண்டியவர்களாகின்றனர். அத்தொழில் மிக இகழ்ச்சிக்குரியதாகி அவர்களுடைய வாழ்நாளில் இன்பமற்றுப் போகிறது. நாஸ்திகந் தலை தூக்கி நிற்கின்ற இக்காலத்தில் எவ்வளவு படிப்புள்ளவராயிருந்தாலும் யாசகத்துக்கென்று ஒருவர் புறப்பட்டால் அவரது படிப்பு ஒழுக்கம் முதலிய யாவும் அலக்ஷியப்படுத்தப்படுகின்றன. இதனால் அவரையேயன்றி அவர்கற்றுள்ள சாஸ்திரங்களும் அலக்ஷியப்படுத்தப்படுகின்றனவென்பது மிகையாகாது. மேலும் வேத பாடசாலைகளிற் பயின்று வெளிவரும் மாணவர்கள் உலக விஷயங்களில் எதுவுந் தெரியாமல் தங்கட்குக் கொடுக்கப்பெற்ற பாடத்தைக் கிளிப்பிள்ளைப் பாடமாகப் படித்து உருப்போட்டுவிட்டு வெளிவருகின்றனர். இதனால்தான் குழந்

தைகள் இப்படிப்பை அலக்ஷியப்படுத்துகின்றனர். ஏனைய பொது ஜனங்களும் இதனை அதிகமாக விரும்பவில்லை. தற்காலமுள்ள வேதபாடசாலைகளில் கனம்கம் அத்யயநஞ்செய்வதற்கு மாணவனுக்கு வயது ௨௰ ஆகிவிடுகின்றது. இதனைக்கற்று வெளியில் வரும்போது வேறுள்ள உலக வியவகாரங்களில் எதுவுந்தெரியாதவனாக இருக்கிறான். அங்கு இம்மைக்கு வேண்டிய பாடங்கள் எதுவும் கற்பிக்கப்படாமையாலும், வேதத்திற்குப் பொருள் தெரிவிக்கப்படாமல் உருப்போடுகிற மட்டில் கற்பிக்கப்பட்டிருக்கிறபடியாலும் உலகஜனங்களிடையில் அவன் ஒரு புதுமனிதனாகவே காணப்படுகிறான். இம்மாதிரியான பாடத்தைக் கிளிப்பிள்ளை போல பல வருஷகாலம் பயின்றும் தனக்காவது பிறருக்காவது பெரும்பயனை உண்டாக்க முடியவில்லை. "பல வருஷங்கள் பயின்றும் உணவுக்கு வாழ்நாள் முழுமையும் கஷ்டப் பட்டுக்கொண்டு, உலகிற் பயனில்லாதிருந்தாலும் வேதபாடசாலையில்தான் படித்தல் வேண்டும்" என்று கருதுவதற்குக் காலம் புரண்டு போய்விட்டது. எத்தனையுயர்வாக விருந்தாலும் பயனுடையதாயிருந்தாலும் காலத்தின் நிலைமையை அறிந்து நடவாவிடில் பயனைப்பெற முடியாது.

ஆகவே, இப்போது வேதத்தை அத்யயநஞ் செய்தலும் வேண்டும்; அங்கு படித்து வெளியே வருகிற மாணவர்களுக்கு வெளியில் வருகிற தினத்தில் தகுந்த வருவாய் கிடைக்கவும் வேண்டும். அவர்களுக்கும் உலகத்தில் வாழும் முறைகளும் ஒழுக்கமும் போதிக்கப் பெறுதல் வேண்டும். அப்படியானால்தான் வேதபாடசாலைகளால் உலகத்துக்கு மிகுந்த பயனேற்படுவதோடு ஜனங்கட்கும் இந்தப்படிப்பில் ஆர்வமுண்டாகும். இப்பொழுது நடைபெற்றுவரும் பாடசாலைகளிலேயே, பாஷையினது இலக்கிய விலக்கணங்களை நன்கு கற்றுக்கொள்ளுதற்கும் மற்றை உலக விஷயங்களை யறிந்து கொள்ளுதற்கும் வேண்டிய படிப்புக்களைக் கையாளுமாறு செய்தல் வேண்டும். சிலவிடங்களில் சாஸ்திர பாடசாலைகளிருக்கின்றன. அதற்கு பிள்ளைகள் சொற்பமாகவாவது கிடைப்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றோம். பயனுள்ளதென பொது ஜனங்களால் கருதப்பட்டாலல்லது படிக்க யாரும் வரமாட்டார்கள். இந்தப் பாடங்களைப் பரீக்ஷை செய்தல் வேண்

டும். வருஷமொரு முறை யெநும் பரீக்ஷை வைத்து அதில் தேர்ச்சி பெறுவார்க்கு நற்சாக்ஷிப் பத்திர மளித்தல் வேண்டும். வைதிக காரியங்களை இரண்டு மூன்று பகுப்பாக்கி ஒவ்வொன்றையும் பிள்ளைகளின் விருப்பப்படி கற்குமாறு செய்து தேர்ச்சிபெறச் செய்தால் அவர்களால் உலகுக்குப் பேருபகாரங் கிடைக்கலாம். வைதிக காரியங்களும் மந்திர லோபம் கிரியாலோபமின்றி நிகழ்தல் கூடும். காலக்கிரமத்தில் படித்தவர்களைக் கொண்டே வைதிக காரியங்களைச் 'செய்யப் பொது ஜனங்கள் முன் வருவார்கள். படிப்பற்ற பலர் வைதிக காரியங்களில் உபாத்திமை ஸ்தானம் பெற்றுத் துன்புறுத்தி வருகின்றனர். எந்த விதமான அறிவு விளக்கமுமின்றி மோக்ஷத்திற்கனுப்பி விடுவதாகக் கூறிப் பிறரை வஞ்சித்துப் பலர் உயிர் வாழ்ந்து திரிகின்றனர். இந்த நிலையொழிந்து உண்மையான வைதிக தர்மம் சிறந்தோங்க வேண்டுமானால் வேதபாடசாலைகளைத் திருத்தியமைத்தல் வேண்டும். பணக்காரர் மட்டும் பணத்தைக் கொடுப்பது போதாது. அறிவாளிகள் கலந்துழைத்தல் வேண்டும். பழைமபவரட்டுக் கொள்கையுடையவர்களது ஆதிக்கத்திலேயே, இப்பாடசாலைகளிற் பெரும் பாலன அகப்பட்டுக்கிடப்பதும் அபிவிருத்திக் குறைவைக் காட்டுதற்கு ஒரு காரணமென்பதைக் குறிப்பிடாதிருக்க முடியுமோ?

உருத்திராக்கம்.

(ஔஷத குணம்)

(Copy Right)

மகிமை மிகவுள உருத்திராக்கத்தைப்பற்றி நமது தொன்மையான சாஸ்திரங்களில் பொது விதியாலும், சிறப்பு விதியாலும், விசேஷவிதியாலும், பலவகைத்தாய்க் கூறியிருப்பது நமி மூலகமறிந்ததே. ஆகவே அதை விடுத்து உருத்திராக்கத்தின் வைத்திய முறைகளைப்பற்றிக் குடும்ப ஔஷத வகையில் நமது முன்னோர்கள் அநுபவ வாயிலாய் எவ்வாறு உபயோகித்து வந்தார்களென்பதிற் சிலவற்றைக் கீழே குறிப்பிடுதல் பொதுநலப் பிரயோஜனமாகலாம்.

நன்றாய் முற்றித்தேர்ந்ததும், கூடியவரையிற் பருமனுயுள்ள

தும், பார்வைக்கு மஞ்சள் கலந்த செம்மை நிறமானதும், இமைத்துப்பார்த்தால் தங்கச் சாயலைத் தருவதும், சுகந்த மணமுடையதும், சீக்கிரம் தேய்வுபடாமல் அழுத்தமாயிருப்பதும், கையில் எடுக்கும்போதே கனமாகக் காட்டுவதும், இபற்கையிலேயே ஓர் வித பளபளப்பை யுடையதுமாகிய உத்தம ஜாதி உருத்திராக்கமே ஔஷத இனங்களிற் சேர்ந்து பெரும்பயனைத் தருவதாகும். ஒப்புயர்வற்ற ஆயுர்வேத வைத்திய முறைகளில் "செந்தபினம் எழுந்துகுர்தம்" என்றுஉறுதிகூறியுள்ள உன்னத திவ்யஔஷதங்களிலும், இறுதிக்காலத்தில் பேச்சைத்தடுத்த சுவாசத்தை மறிக்கும் (கோழை) கஷ்ட கப ரோகத்தை இளக்கி நீக்கிக், கோழையை வெளிப்படுத்த உபயோகிக்கும் கண்டௌஷதம் என்னும் கபமிருத்து முறைகளிலும் சேர்க்கப்பெறும் முக்கியவஸ்துக்களில் இந்த உயர்ந்த உருத்திராக்கமே முதன்மையானது. வீரம், பூரம், ரூதம், தாளகம், முதலிய பாஷாண வஸ்துக்களைத் தனியாகவோ யோகமுறையாகவோ(யோகம்என்றுல்பலசரக்கைஒன்றுசேர்த்தல்) ஔஷதரூபமாக கிரமப்படி முடித்து, அதுவும்தன்பூரணசக்தியைப் பெற்று அக்கினிக்கும் ஜெயித்துநின்றுல், அப்போது தன் சதாச்சாரியன், ஸ்ரீ தன்வந்திரி பகவான், எல்லாம் வல்ல சர்வேஸ்வரன் இவர்களைத் தியானித்து ரோகிக்கு ஏற்றவாறு தன்மசாந்தியும் செய்து விதிப்படிபிரயோகிக்கின் தன் சக்தியைக்காட்டிப் பிணியை வீட்டும். இதுஎல்லோருக்கும் முடியாதென்பதும், சரக்கின்பேதம், மூலிகையின்பேதம், அரைப்பின்பேதம், புடத்தின்பேதம் இவற்றிற்கேற்பவும், கைபாக செய்பாக தீட்சைபாக அனுபவத்தின் படியும் சரிவர முடிவதும் மாறுபடுவதும் மருந்து மறைந்தோடி வெறுங் குகைமட்டில் நிற்பதும் சர்வ சாதாரண மென்பதை வைத்தியாநுபவிகள் மறுக்கார்.

இவ்வளவு கஷ்ட சாத்தியமாய் முடித்த ரசவர்க்க மருந்தும், எவ்வித சிரமமுமின்றி நித்திய உபயோகத்தில், நமது நாட்டில் நடமாடும் உருத்திராக்கமும் "கபமிருத்து" ஔஷதவகையில் ஒன்றுயிருப்பதைக்காண நமது பூர்வீக வைத்தியம் எவ்வளவு சுலபமாய், பணச்செலவும் காலச்செலவும் வீண் பயங்கரமும் கடர்

டத்தியமும் இல்லாதபடி அமைந்துள்ளதென்பதும் ஸ்ரீ தந்வந்திரியாதிமகரிஷிகளின் அபாரகருணையும், அறிவின் ஆற்றலும் அநுபவமுதிர்ச்சியுடையோருக்கே ஆனந்தத்தை யளிக்கும்.

“உருத்திராக்க முன்னை, மிருத்துமில்லைதானே” என்ற ஏற்றப்பாட்டு இப்போது கால மாறுபாட்டால் நிலைகாட்டாது மாறிவிட்டது. கிராமாந்தரங்களில் அதிகாலையில் ஏற்றம் இறைக்கும் வயற்புறங்களில் ஒவ்வொரு வியவசாயியின் வாயிலும் சாமான்யமாய் உச்சரிக்கப்படும் வார்த்தை இது. கைக்குழந்தைகளின் இருமல் முதல், பெரியவர்களின் காசரோகம் வரையில் இந்த உருத்திராக்கம் பாட்டிமார்களின் வீட்டுச்சரக்காய் நின்று கார உருண்டைபோல் உரை மருந்தாகவோ, ஊறல் கியாழமாகவோ, மேல் பற்றுபூசுதல் மூலமாகவோ உபயோகமாகி ஒவ்வொரு குடும்பத்தையும் பாதுகாத்துவருதல் முன்னைநாள் வழக்கம். மதலைகளுக்காக பிரதிதினமும் புகட்டிவரும் உரைமருந்துகளில் உருத்திராக்கமும் ஒன்றாக இழைத்துச் சேர்க்காதவீடு இருந்ததில்லை யென்பதை இன்றும் வயது முதிர்ந்த மூதாட்டிகள் வாயிலாகக் கேட்கலாம். ஸ்நாந ஜலத்திலும், பானம் செய்யும் தீர்த்தத்திலும் துளசியைப் போல உத்திராக்கத்தையும் சற்று நேரம் ஊறவைத்துப் பின் உபயோகிப்பது பூர்வகால சுகாதார முறைகளில் முக்கியமானதாக ஆயுர்வேத வைத்திய நூற்கள் கூறி நிற்கும். இன்னும் இதன் குணங்கள் அனந்தம். இதைப் பற்றி தேரைய மகா முனிவர்:—

வேண்பா.

நீளுயதி தாகத்தை நீங்காமுத் தோஷத்தை
ஆளும்விக்கல் பித்தத்தை யகற்றுங்கா—ணுளு
மீருத்திரா மற்கபத்தை வீட்டுமே நல்ல
உருத்திராக் கத்தின்வலி யுன்

என்று சுருங்கக்கூறி விளங்க வைத்துள்ளார்.

காமதேனுவை முன்னிட்டு வஸிஷ்ட மகாமுனிவருடன் போர் புரிந்தவரும், அதே காரணத்தால் அரசையும், அரசபோகங்க

ளையும், இராச்சியத்தையும் வெறுத்தவரும், அரசபலம் பலமல்ல; தபோபலமே அதாவது தெய்வபலமே பலமெனக்கொண்டு எண்ணற்கரிய திடவைராக்கியசாலியாய்ப் பலவிக்கினங்களினிடையே கருமமே கண்ணாய் நின்று தொடுத்த காரியத்தை முடித்துப் பிரம சிருஷ்டிக்குப் பதில் சிருஷ்டி செய்து, புல்லும் பூமியும் உள்ளவரையில் சந்திராதித்தர் பிரகாசிக்கும் இடமெங்கும் தன் பெயர் நிலைக்கச் செய்தவருமாகிய விஸ்வாமித்திர முனிவர்:—

"வாதம் பித்தம் வளருஞ் சேட்மம்
சூதுசெய் தொந்த சுரங்களோ டின்னும்
முறைமுறை மாறி வருசுரம் பலவும்
வரைமுனி சொன்ன வகைபல ஜன்னி
கதிமாறு விக்கும் கனத்தமுத் தோஷம்
சதிசெய் கின்ற சண்டாள கபமும்
தாங்காத விக்கல் தவித்திடும் வாந்தி
நீங்காத தாகம் நினைவழி பித்தம்
இவ்வழி யேவரு மெல்லாப் பிணியும்
அவ்வழி விட்டே யகன்றிட வேண்டின்
பத்தரை மாற்றுப் பசும்பொன் னிறமாய்
உருத்திராக் கத்தை யுகந்ததா யெடுத்துப்
பிணியிலா மங்கையர் பெருந்தனப் பாலில்
மணமுள தேனில் மற்றுங் கியாழத்தில்
அநுபான வகையில் அளவா யிழைத்து
இனமாய்க் கொடுத்திட இறங்கிடு நோய்கள்
சூக்கும முறையிது தொல்லுல கோர்க்கு
ஆர்க்கும் பண்டித மவரவர் செய்திட
ஆபத்து வேளையில் அதுவே மருந்தாய்
தாபத்தைத் தீர்த்துத் தணித்திடும் பிணியைச்
சஞ்சீவிக் கொப்பாந் தனிருத் திராக்கம்
அஞ்சலி செய்தே யகிழ்தமாக் கொள்வீர்."

என்று லோகோபகாரங் கருதி வெளியிட்டிருக்கும் அருமை, அத்துறையில் உழைத்துவருவோர்க்குப் புத்துயிரளிக்குமெனல் மிகையாகா. மேற்காட்டிய மேலோர் வாக்கியங்களால் உருத்திராக்

கத்தின் குணவிசேஷமும், அதனிடத் தடங்கியுள்ள ஔஷதத் தன்மையும் அதை உள்ளேயும் வெளியேயும் உபயோகிப்பதால் உண்டாகும் பெருமித நன்மையும் தெள்ளிதின் விளங்கும்.

மேல் விவரித்துள்ள ரோகங்களால் அதிக துன்பமுண்டாகி ஆபத்து விளையுமோ என்னும் அதிபயங்கர நேரத்தில், அநுபவசாலிகளான உத்தம வைத்தியரும் கிடைக்காத அவசர சமையத்தில், எவ்வித பயமும் சந்தேகமும் இன்றி உருத்திராக்கத்தை, சுத்தமான தேனிலாகிலும், நோயற்ற மங்கையர் பாலிலாகிலும், இஞ்சிச் சுரசத்திலாகிலும், வெற்றிலைச் சாற்றிலாகிலும் இவை ஒன்றுமே கிடைக்காதபோது வெந்நீரிலாகிலும் இழைத்து, உள்ளுக்குச் சாப்பிடச்செய்ய எவ்வித ஆபத்தும் நீங்கித் தற்கால சுகத்தைக் கொடுத்துப் பேருதவிசெய்யும்.

வைத்திய சாஸ்திர அநுபவமுடையோர் அந்தந்த ரோகங்களுக்குரிய அநுபானங்களில் சேர்த்துக்கொடுக்க (கன்ம ரோகங்கள் நீங்கலாக) ஜென்ம ரோகங்கள்பலவும் சிற்சில கடிவிஷங்களும் அதியாச்சரியமாய் நீங்கி விரைவில் நல்ல குணமுண்டாமென்பது சொல்லாதமையும்.

உருத்திராக்கம் ஊறிய ஜலத்தில் அதிகாலையில் ஸ்நாநம் செய்து சூரியோதயத்தின் முன் உருத்திராக்கத்தைத் தேனில் இழைத்து மிளகளவு உட்கொண்டுவர, "மிகினுங்குறையினு நோய் செய்யு நூலோர் வளிமுதலாவெண்ணிய மூன்று" என்ற பொய்யாமொழியின்படி வாதமாதி முத்தோஷங்கள், மீறாது அதனதன் மாத்திரையளவில் நின்று நோய்க்கிடங்கொடாமல் தேகத்தைப் போஷித்துப் பாதுகாத்துக் கொள்ளச் சூட்சும வழியாகும்.

குழந்தைகளுக்குச் சளிக்கட்டி மூச்சுத்திணரித் திக்கு முக்காடும் சமையத்தில் தாய்ப்பாலில் உருத்திராக்கத்தை இழைத்துத்தாலும், அந்திமதசையில் இவ்வாறு கொடுத்தலும் உலகமறிந்ததே!

அ. வேங்கடாசலமுதலியார்,
ஆயுர்வேத வைத்தியர், திருவெண்ணைமலை.

மீராபாய்.

(வாகீசபக்தன் எழுதியது.)

நமது பாரதமணித் திருநாட்டிலே, இராஜபுத்திரர் என்னும் க்ஷத்திரிய வீரர்கள் மலிந்திருந்த பாகமாகிய ராஜபுதனத்திலுள்ள உதயப்பூர் என்னும் புண்ணியதலத்தில், முன்னொரு காலத்தில் ஒரு தெய்வபக்தியிற் சிறந்த அரசன் செங்கோல் செலுத்திக் கொண்டிருந்தான். அவன் கிருஷ்ண பகவானுடைய திருவிக்கிரகம் ஒன்றை வைத்து நாடோறும் பூஜித்துக் கொண்டு வந்தான். இங்கனம் இவ்வாறாகச் சின்னாட்களில் அவனுடைய கோப் பெருந்தேவி ஒரு அழகிய திருமகளைப் பெற்றெடுத்தாள். அம்மன்னன் அக்குழந்தை பிறந்த பன்னிரண்டாவது தினத்தில் அதன் முடியைக் கிருஷ்ணபரமாத்மாவின் திருவடிக்கு அணியாக்கி, அதற்கு மீராபாய் எனப் பெயரிட்டனன். அப்பெண்மகவு நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து, தனது இளமைப் பருவத்திலேயே மிகுந்த பக்தி சிரத்தையோடு கிருஷ்ணபரமாத்மாவைப் பூஜிக்க ஆரம்பித்தது. அந்நங்கையின் பக்தி முதிர்ச்சியால் அவள் நெஞ்சு நிறைபத்திருமால் புகுந்தனன். ஆதலால் அவள் "அந்த பரமாத்மாவே தனக்கு நாயகனாவான்" என்று பிரதிக்ஞை செய்து கொண்டாள்.

ஒருநாள் அக்கோதையின் தாதையாராகிய அவ்வரசன், அப்பெண்மணியைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு தனது பத்தினியினிடத்து "மீராபாய் கடிமணப் பருவத்துக்கன்னிகையாயிருக்கின்றாள். ஆதலால் நாம் அவளுக்கு ஒரு மணாளனைத் தேடுதல் வேண்டும்." என்று கூறினான். ஆனால் அவ்வரசிளங் குமரியோ, "வேண்டாம்! அப்பா! நான் முன்னமேயே ஒரு ஆன்ம நாயகனைத் தேர்ந்தெடுத்திருக்கின்றேன். நமது கிருஷ்ண பரமாத்மாவே அம்மணாளன். ஆதலான் அவருடைய திருவிக்கிரகத்தை என்னிடத்திற் றந்துவிடுங்கள். எனது திருமணத்தைப்பற்றிமற்றொன்றும் சிந்

தனை செய்தல் வேண்டாம்'' என்று சொன்னாள். இதனைக் கேட்டுக் கொண்டிருந்த அம்மன்னன் இளமுறுவல் செய்து, "நீ ஒரு விளையாட்டுந்தனமுள்ள சிறு குழந்தை. கிருஷ்ணபரமாத்மாவினுடைய விக்கிரகம் ஒரு வெறுங் கற்சிலை. அது ஒரு போதும் உனது நாயகனாக இருக்கமுடியாது. அன்றியும் இக்கலியுகத்தில் அவர் யாருக்கும் வெளிப்படுவதில்லை'' என்றனன். "அல்ல, அல்ல. அவர் இக்கலியுகத்திலும் அடியார் பலர்க்குத் தெரிசனங் கொடுத்திருக்கின்றார். ஆதலால் எனக்கும் அவர் தெரிசனங் கொடுப்பார்.'' என்று பதிலிறுத்தனள் அவ்வாசிளங்குமரி. அம்மன்னன் அம்மகவினிடத்து அதிக பிரியம் வைத்திருந்தபடியால் அதன் எண்ணத்தைத் தடுக்க முடியாதவனாய்'' "குழந்தாய்! மிக நல்லது!! கிருஷ்ணவிக்கிரகம் உன்னுடையதே! நீ அதனை எடுத்துக்கொள்'' என்று தன்னுடைய இன்சொற்களாற் குழந்தையைச் சந்தோஷப்படுத்தினான். பின்னர், மீராபாய் எல்லையில் உவகைகொண்டு, அவ்விக்கிரகத்தைத்தன்னுடைய அறைக்கு எடுத்துக்கொண்டுபோய், ஒருஅழகிய பீடத்திலே வைத்து நாடோறும் பூஜைசெய்து கொண்டு வந்தாள். வேண்டிய பூஜா பதார்த்தங்களை யெல்லாம் வேந்தன்கொடுத்தனன். ஒவ்வொரு நாளும் அவள் அதிகாலையில் எழுந்து, அகத்தையும் புறத்தையும் சுத்திசெய்துகொண்டு இன்னிசையாழைக் கையில் வந்திகொண்டு, கண்டமும்கருவியும்ஒக்கப் பண்பல இசைத்துப் பகவானுக்குப் பாமாலை சூட்டுவாள். பிறகு அத்திருவிக்கிரகத்திற்குத்திருமஞ்சனம் ஆட்டுவாள். ஈரம் புலர அதனைத் துடைத்து, அழகிய ஆடைகளையும் அணிகலன்களையும், அதற்குச் சாத்திய பின்னர், துளசிமாலைகளையும் பன்னீர் முதலிய வாசனை திரவியங்களையும் அணிவிப்பாள். அதனால் அவ்வரண்மனைமுழுதும் நறுமணங்கமழும். அதற்கு உயர்ந்த தளிகை யாராதனங்களை நைவேதனஞ்செய்து பூஜிப்பாள். அவைகளைக் கிருஷ்ணபரமாத்மாவின் மீது கீதங்களைப்பாடுதற்கும் தோத்திரங்களைச்சொசொல்லுதற்கும், ஆங்கு அவள் அழைத்து வரும் அடியார்களுக்கு விநியோகஞ்செய்வாள்.

இவ்வாறு மீராபாய் பகவத் பக்திசெய்து கொண்டிருக்கும் நாளில், அவ்வுதயப்பூர் என்னுந் திருநகரத்திலுள்ள தீயமாக்களிற்

சிலர், அவளுடைய ஒழுக்கத்திலே குற்றங்காண முயற்சி செய்து, "ஆ! நல்ல இராஜகுமாரி இவள்! நாணம் என்பதே கொஞ்சமும் கிடையாது. ஏகாந்தமாக வசிக்கவேண்டியதை விடுத்துத் தன்னுடைய வாழ்நாளையெல்லாம் நாடோடிப்பரதேசிகளோடு வேடிக்கையாகக் கழித்துக்கொண்டிருக்கின்றாள். ஆனால் அரசனோ, நாம் நமது கடமையிலிருந்து அணுமாத்திரி பிசகினாலும் நம்மைத்தக்கவாறு தண்டிக்கின்றான். ஆயினும் தன்மகளின் நடக்கையைக்கவனியாது, கண்ணிலா மூடனாய் இருக்கின்றான்." என்று பலவாறாக அவதூறாய்ப் பேசிக்கொண்டிருந்தனர்.

இவ்வாறு அவர்கள் பேசிக்கொள்ளுவதை அறிந்த அரசன் அந்தப்புரத்திற்குச்சென்று தன்மனைவியினிடத்தில் அதனை அறிவித்து, "மீராபாய் இனி ஒரு க்ஷணநேரமும் இந்தப் பேச்சிற் கிடமாயிருத்தல் கூடாது. ஒரு மணாளனை மணந்து கொள்ள ஆயத்தமாயிருத்தல் வேண்டும்." என்று அவளிடத்திற் சொல்லும்படி கட்டளையிட்டான். அவ்வாறே அவ்வரசியும் அப்பாகவத உத்தமியினிடத்தில் அதனைப் பகர்ந்தாள். ஆனால் அந்கோதை, "கிருஷ்ணபரமாத்மாவைத் தவிர நான் ஒருவரையும் மணக்கமாட்டேன். மன்னர்பிரான் எதற்காகக் கீழோர் வார்த்தைகளுக்குச் செவிகொடுத்துக்கவலுதல் வேண்டும். என்னுடைய ஹிருதயகமலத்தினுள்ளே, அவர் நுழைந்து பார்க்கமுடியுமானால், அது ஸ்படிகம்போல் பரிசுத்தமாக இருப்பதை அறிவார்" என்று கூறினாள். பின்னர் அவ்வரசி, அரசன்பாற்சென்று மீராபாயின் விடையைக்கூறினாள். அதனைக்கேட்டதும் அரசன் அடங்காக்கோபங் கொண்டனன். "அவள் ஒருவரையுந் திருமணஞ்செய்து கொள்ளாத போனால் ஆவி துறக்க நேரிடும்" என்று அறைந்தனன். "நமதுகுலத்திற்கு இவ்வாறு அகௌரவத்தைச் சம்பாதித்துத்தருகின்ற இப்பெண் மகவு இருப்பதினும் இறப்பதே சாலவும் நன்று" என்று கண்களிலே நெருப்புப் பொறி பறக்கக் கடுமொழிகள் பல புகன்றனன். அவ்வரசியினிடத்தில் விஷங்கலந்த திரவபதார்த்தமுள்ள கிண்ணம் ஒன்றைக்கொடுத்து, அதனை மீராபாய்க்குக் கொடுக்குமாறு கட்டளையிட்டனன். ஆனால் அவ்வரசியானவள் அரசன் ஆக்ஞையை மீறும் ஆற்றலிலளாய், மெய்யெலாங்கண்ணீர் சோரப் பட்டாடை

கண்ணையமனமும்பண்டப்புறமதியிலளாய், அரசிளங் குமரியின் அறைக்குச் சென்று, அவள் கண்ணபிரானை வழிபடுவது கண்டு, கிண்ணத்தை அவள் கையிற் கொடுத்து, "இதனைப்பருகுக! உன் தந்தையார் கட்டளை" என்றனள். கண்ணீர் ஆறப் உகுத்தனள். "ஐயகோ! என் ஆசைக்கண்மணியே! அமுதிற் சிறந்த கட்டிக்கரும்பே! உன்னை நான் எப்படிப் பிரிவேன்" என்று கூறினள்; பதறினள்; படிமிசை வீழ்ந்தனள். அப்பொழுது அவ்வம்மையாரை, அவ்வரசிளங் குமரி கட்டியணைத்துக்கொண்டு, "அம்மா! அதாகே!! நமது உயிர் வாழ்க்கை கானல்ஜலம் போன்றது. மின்மினி பொளியின் மாயுந் தன்மையது. கானல்ஜலம் காய்ந்தால், மின்மினிபொளி மாய்ந்தால் நாம் எதற்காகப் புலம்புதல் வேண்டும்? நான் உயிர் துறக்கும் பொழுது, கிருஷ்ணபகவான் என்னைத் தன்னிடத்திற் சேர்த்துக் கொள்ளுவார். ஆகலான் அன்னாய்! அஞ்சற்க!" என்று அறிவுரை பலநிகழ்த்தி, அரவணையான் திருவடிமிசை வீழ்ந்து, அவன் அன்பில் ஆழ்ந்து, "பகவானே! ஒன்றே ஒன்றுதான் என்னைத் துன்புறுத்துகிறது. என்னைத்தந்தை மன்னுங் காக்கினுல் உன்னைப் பூஜிப்பது யார்? வேந்தன் உன்னை வெறுத்துத் தள்ளுவான். ஏனெனில், "நீயேயன்றோ என் மகள் உயிர் துறத்தற்குக் காரணபூதமா யிருந்தாய்" என்று கழறுவானன்றோ? நகரவாசிகளும் உன்னைவிட்டு விலகி விடுவார்கள். உன்னைத் தொழுததினுலேயே மீராபாய் இறந்தாள்" என்று சொல்லுவார்கள். வீணாக எளியேன் ஏன் கவலைப்படுதல் வேண்டும். நீயன்றோ எல்லாவுலகங்களுக்கும் நாயகன். நீ கூடாதவற்றையுங் கூட்டுவிக்குந் திறமுடைய மாயனுதலால் நின்னுலாகாததுண்டோ? "தன்னையடைந்தார் வினைதீர்ப்பதன்றோ தலையாயவர் தங்கடனுவதுதான்" ஆதலால் அடியார்களுக்கு நேரிடும் இடுக்கண்களை எல்லாம் நீதான்களைதல்வேண்டும்." என்றுபுகன்று, கண்ணன்கமலச்சேவடியில் அக்கிண்ணத்தை வைத்து நைவேதனஞ்செய்தாள். பிறகு அதனை எடுத்துக், "கண்ணா! கண்ணா!! காயாம்பூ வண்ணா!!!" என்று சொல்லிக்கொண்டே அதனைப் பருகினுள். அவள் அன்னையார், அளவிலா ஆச்சர்யம் அடையும்படி, அஃது அவளை ஒன்றுஞ்

செய்பவில்லை! இஃது ஒரு பெருவியப்புமின்று. ஏனெனில், "நஞ்சமமுதாம் எங்கள் நாதனடியார்க்கு" என நாவுக்கரசர் நவின்றார்; நஞ்சுகண்டார்; புலனஞ்சுங் குளிரக்கண்டார்; "மாசில் வீணை" பயின்றார். இப்பெற்றிபோல பிரகலாதாழ்வான் சரிதையும்.

இனி, அப்பூங்கொம்பர், இருவிழிகளிலும் இன்பக்கண்ணீர் ஒழுக, அழகு ஒழுக மூரலிள நிலவு ஒழுகும் முகத்தொடு நின்றாளாயினும், நிழல்மணிவண்ணத்தானின் திருவிக்கிரகம் கருநிறங் கரந்து, பசியநிறம்பரக்கப்பெற்று விளங்கியது. ஓடினாள் அதனைக் கண்ட கோப்பெருந்தேவி. உரைத்தாள் புரவலனிடத்தில். அவன் அதனைநம்பாது விக்கிரகத்தைப் பார்க்க விரைந்து வந்தான். அதன் மாறிய வடிவத்தைக்கண்டான். உருக்கங்கொண்டான். பரவசமானான். மீராபாயின் திருவடிமிசைத் தன் மணிமுடி சூட்டினான். "நான் அக்கிரமமாகக் கிருஷ்ண பகவானுக்கு விடத்தைக் கொடுத்துவிட்டேன்" என்று கூவினான். "எனதருமைத் திருமகளே, அது அதன் முந்திய வடிவத்தை அடையுமாறு பிரார்த்தனை செய்" என்று பிரார்த்தித்தான். மீராபாய், தந்தையாரைத் தன் அடியில் நின்றும் பெயர்த்து, அன்புருவாய் நின்று, "கரிய மேனித்திருமாலே! உன்னைக்கார்விடம் எப்படித் துன்புறுத்தும்? நீ, காளிங்க நர்த்தனஞ்செய்த கண்ணனன்றோ? ஆதலால், கடிய விடந்தனைக் கரந்து முன்னுருவம் பெறுதி" என்று பிரார்த்தித்தாள். இவ்வாறு அவள் தோத்திரஞ் செய்ததும், அத்திருவிக்கிரகம் கருங்கார் நிறமாயது. பசிய நிறம் பறந்து போயிற்று. அஞ்ஞான்று, அரசன் அரசி அரசிளங்குமரி ஆகிய மூவரும் அன்புருவமாயினர். இதனை யறிந்த அவ்வுதயபுர வாசிகளெல்லோரும் அவ் வரவணையானுக்கு அன்பு செய்தனர். இவ்வற்புதச் செய்கை மறையா வண்ணம், அவ்விக்கிரகத்தின்கண்டத்தில் ஒரு சிறுபாகம் பசுமையாயிருந்தது. இன்றும் நன்றாக நாம் அவ்வுதயபுரம் என்னும் திருத்தலத்தில், அத் திருவிக்கிரகத்தை அதன் பசியநிறப் பொலிவோடு காணலாம்.

இவ்வரும்பெருஞ்சரிதத்தினின்றும், நாமறியக்கிடப்பதியாது? மீராபாயின் திடபக்தியினின்றும், "கடவுளை நம்பினோர் கைவிடப்

படார்; நஞ்சமும் அமுதாகும்'' என்ற நீதிகள் புலனாகின்றன. அம் மங்கையர்க்கரசியின் தந்தையார், கிருஷ்ணபகவானின் திரு விக்கிரகத்தைக் கல்லெனக் கழித்ததுகொண்டு, அன்னார் மேனோக்கிய (உள்ளன்பில்லாத) பக்தியுடையார் என்பது இனிது புலனாகின்றது. நாகரிக முதிர்ச்சியின் பயனைப் பழுத்திருக்கும் நாத்திகவாத நறுங்கனி நாறும் தற்காலத்தில், நமது வைதிக சமயங்களெல்லாம், நமது பெண்ணருங்கலங்களாலேயே இன்னும் உயிரோடிருக்கின்றன வென்பதும், ஆகலான் ஆடவரினும் பெண் டிரே, வைதிக நெறிகளை வழுவாது இயற்றி வருகின்றார்களென் பதும் இனிது விளங்குகின்றன. மீராபாயின் தாயார், தன்னுடைய கண் கட்டளையை நிறைவேற்றுவான், நஞ்சையீந்தனளாயினும், பலர்க்கும், தன் இன்னுயிர்ச்சேயெனும் பாராதுமாய்க்கும் நஞ்சினை ஈந்தாளாதலால், குற்றமாகவே புலப்படும். ஒருகால் உலகோர் தூற்றுவதும், மறுகால் ஏற்றுவதும் இயல்பே'' என்பது அவ் வுதயபுர வாசிகளின் மனப்பான்மையினின்றும் இனிது விளங்கு தல் காண்க. இது வடநாட்டிலே நிகழ்ந்த சரிதம். நமது தமிழகத் திலும் இத்தகைய சரிதங்கள் பல நிகழ்ந்திருக்கின்றன. மீராபாய் கண்ணபிரானையே, கணவனாகக்கொண்டதுபோல், ஆண்டாளும் அன்னானையே ஆன்மநாயகனாகக்கொண்டாள். நமது தமிழ்நூல்க ளிலே "கடவுளை நம்பினோர் கைவிடப்பார்.'' என்னும் முதுமொ ழியைவிளக்குதற்குப்பல சரிதங்கள் உள. அவைகளுள், திருநாவுக் கரசர் திருஞானசம்பந்தர் சுந்தரர் மாணிக்கவாசகர், மார்க்கண் டேயன் பிரகலாதாழ்வான் துருவன் முதலிய பெரியோர்களின் சரிதங்கள் பிரபலமானவை. ஆகலான், நமது மக்கள் தத்தம் மதத்தின் வழிநின்றுத்தெய்வ நம்பிக்கை கொள்ளுதல் வேண்டும். அஃதே நம்மை உயர்த்தும் நன்னெறியாகும்.

ஏற்றான்புள் ளூர்ந்தான் எயிலெரித்தான் மார்விடந்தான்
நீற்றான் நிழன்மணி வண்ணத்தான்—கூற்றொருபால்
மங்கையான் பூமகளான் வார்சடையான் நீண்முடியான்
கங்கையான் நீள்கழலான் காப்பு.

—பேயாழ்வார்.

செந்தமிழ் முறையீடு.

(ஸ்ரீமாந் அரு. சோமசுந்தரஞ் செட்டியார் எழுதியது.)

தமிழ்த் தெய்வ வணக்கம்.

உரைத்தமிழ் மூவர்நாவி னூற்றெழு மமுதைச் சங்கத்
திருக்கும் வெண்முத்தைக் கற்றோ ரென்னுமீக் கூட்டுந் தேனை
வரைத்தமிழ் முனிவ னெஞ்ச மலர்க்கமலப்பூஞ் சேக்கைத்
திருந்தகு மரசவன்னப் பெட்டினைச் சிந்தை செய்வாம்.

—கந்தசாமிப் புலவர்

எழுவாய்.

செந்தமிழ்ச் செல்விகளே!

செந்தமிழ்ச் செல்வர்களே!!

சின்னாட்களாக நமது தமிழ் அணங்கு, தனது முரல் இள நிலவு ஒழுக அழகு ஒழுகப் புன் முறுவல்செயும் செய்ய தாமரை முகத்தில் முழு ஒளியும் இளந்திங்களின் கலை எனத் திகழ, ஆனந்த நடனம் செய்யும் அரிய காட்சியைக் காண்டலும் கேட்டலும் அரிதாய் இருக்கின்றதன்றோ? இலைமறைகாய்போல், நமது தமிழ்த் தெய்வம் யாண்டோ உறைகின்றதுபோலும்! வேறொரு புலமாது வலிய வந்து களிக்கூத்து (Dance) ஆடுகின்றாள். இளைஞர்பலர் அவ்வாட்டத்தில் மயங்கிக் கிடக்கின்றார்கள். தமிழ் மொழி பேணுவோர் தொகையோ அருகி இருக்கின்றது. புறமொழி பேணுவோர் தொகையோ பெருகி இருக்கின்றது. தமிழைத் தமிழரே புறக்கணிக்குங் காலமும் உதயமாகியிருக்கின்றது! நமது அருந் தமிழ் மொழியை, அருள் மொழியை, அங்கயற்கண்ணி பங்கன் அருள்தர வருமொழியை, ஒரு மொழியை, ஒப்பற்ற மொழியைத், திருமொழியைத், தெய்வமொழியை, உயர்தனிச் செம்மொழியை, மாதேவன் வடிகாதகம் புக்குள்ளிருக்கும் எங்கள் கண்ணிற்பொலி செந்தமிழ் மொழியை, நவில்தொறும் நாணு நாவும், கேட்டொறும் கைக்குஞ் செவியுமுடைய செல்வச் சீமான்

களும் பலர் உளர்! ஆதலான் பொதுவாகத் தமிழ்மணம் குன்றி யிருக்கின்றது என்னலாம். ஆனால் நமது நாட்டில் தற்காலம் நிலவி யுள்ள மாபெருங் கிளர்ச்சியின் பயனால், முன் தளர்வுற்றிருந்த தமிழ் மணம் தற்போழ்து அரும்பி இருக்கின்றது. அது கண்டு, செந்தமிழ் சிறப்புறப் பயிலும் ஒரு சில மாணாக்கர்கள் செவ்வி தேர்ந்து முறையிட்டுத், தம் தமிழ்த்தாயையும் அன்னை நல்லாரையும் உடன் பிறந்தாரையும், கரைந்து கலந்துண்ணும் ஆக்கங் கருதிச் செந்தமிழ்த் தீம்பால் பருகுவான் விரும்பி அழைக்கின்றார்கள். நந்தமிழ் மொழியின் முற்கால—தற்கால— நிலைமையை விளக்கவும், தமிழ்மொழிப்பற்றை வளர்க்கவுமே, இம்முறையில் இக்கட்டுரையை எளியேன் வரைந்தனன். தமிழ்ப்பற்று உடையோர் இதன் உண்மை கண்டு தெளிந்து களிந்து, தண்டமிழ்ப் பணி செய்வதே தம் கடனாக்கொண்டு உப்ப, முன் வருவார்களாக!

தமிழ்த்தாய்க்கு முறையீடு.

இன்னிசைக் குழலினும் இனிய குதலைத் தீஞ்சொற் குழவியர்க்குச், செய்பொன் வள்ளத்திற் செந்தமிழ்த் தீம்பால் அருத்தும் அன்னாய்! இனிமைத்தனிச் செம்பொருட் செல்வி!! தித்திக்கும் மணிவார்த்தை இன்னம் பன்னாள் திருச்செவியில் அருத்தாது, எங்களை இங்கு இருத்தி எங்கு உற்றனை? எந்தாயே! ஒரு கணமேனும் நினைப் பிரிந்தற்கு ஆற்றகில்லேம். நன்னகரங்களினும் நின்னறுமணம் கமழக் கண்டிலேம்; நாட்டினுங் கண்டிலேம்; யாண்டுங்கண்டிலம். நினது செந்தமிழ்மணக்கும் செங்கமலச்சேவடியிற் செந்தமிழ்ச் சீர்பரவிக், ‘கலீர்! கலீர்!!’’என ஒலிக்கும் செம்பொற் சிலம்பொலி கேட்டிலம். மறுமணம் நாறக்கண்டனம். மூரி முழங்கொலிமுந்நீர்க் கடற்கரைகளினும் ஊர்திகளினும், வேற்றொலியையே கேட்டனம். பல்லாயிரம் மயிலுக்கு அப்பாலுள்ள பதிவிரதை பல்லெல்லாம் தெரியக் காட்டிப், பீங்கான் தாழுத்தியாற் பெட்டிப் பால் ஊட்டப், பாலர் பலர் பருகக் கண்டனம். “முத்தமிழ்ச் சங்கால் தேவாமருந்து அருத்தும் அன்னாய்! அன்னாய்!!” என்று அரற்றித் தேம்பித் தேம்பி அழுதனம். நின்னை யாண்டுங் கண்டிலம். உதவா ஒருசில மக்களுக்காக எங்களையும் மறந்து கரந்தனையோ?

அருந்தமிழ் அன்னாய்! நீ யாண்டு எற்றுக்கு எழுந்தருளினை? அடியோமுக்கு அதனை அறிவியாயோ? அன்றேனும் மக்கள் எனும் பரிவுகொண்டு தண்டமிழ்ப்பால் கொடுக்கத், தண்டமிழ்நாடுபண்டு கடல்கொண்ட தரங்கவேலையிடை, முத்தமிழ்ச் சங்கம் எடுக்கச் சென்றனையோ? அவர்களுக்கு முத்துமாலை இட்டு முகங்குளிர வைக்க, நன்முத்துந் தொளிக்கச் சென்றனையோ? முடியுடை வேந்தர்மூவரும் போற்றிப்புகழ்ந்து புரந்த முத்தமிழ் அன்னாய்! நீ முனிவுற்றது என் கொல்? நின் இயற்றமிழை மனம்போன போக்கெல்லாம் மாற்றிச் சாற்றுகின்றனர் என்றோ? நின்னாடகத் தமிழை ஏடகத்தமிழ் (ஏட்டுச் சுரைக்காய்) ஆக்கினர் என்றோ? அதனைத் தெருவெலாஞ் சிரிக்கும்படி தெருக்கூத்தளவிற் கொண்டுவந்து விட்டனர் என்றோ? நின் இசைத்தமிழொடு, பலமொழி இராகங்களையும் இணைத்துப் பிணைத்து, நின் இயல்பைக் கெடுக்கின்றனர் என்றோ? ஐவகை இசைத்தமிழ்க் கருவிகளையும் நன்கு பயிலாது, வேறு புலத்து விநோதக் கருவிகளையே பயில்கின்றனர் என்றோ? நின் செம்பொற் சிறையாம் ஏடுகளைச் செல்லுழும் செய்யாக்கினர் என்றோ? பகுத்தறிவு ஒரு சிறிது மின்றிப் பதினெட்டாம்படியில், "வேண்டாதவனுக்கு வெற்றிலை பாக்குக் கொடுத்து அப்பா, செல்க" என்பதுபோல், பூசைசெய்து அவைகளை வெள்ளப் பெருக்கில் இட்டனர் என்றோ? இன்னுஞ் சில விபாழப்புத்தேளிர் இடுகின்றனர் என்றோ? மடவன்னப் பெடையின் செம்பொற் சிறையைச் சிறைகொள்வார்போல், நின்னுடைய பத்தரை மாற்றுப் பசும்பொற் சிறையாம் அவ்வேட்டுப் பிரதிகளை, நீ பெற்ற சேயர் பேயராய்—ஏமாந்த சோணகிரிகளாய்—நினைவற்றுச் செயலற்றுக் கிடக்க, ஏதிலர் பலர் எடுத்துச் சென்றனர் என்றோ? மற்று முள ஒரு சில ஏட்டுப்பிரதிகளையும், ஏதுமறியா ஏழைகள் பல்லோர்க்கும் பயன்படுத்தாது, தனங்காத்த பூதத்தின் கதைக்கு இலக்காய் இலங்குகின்றார்கள் என்றோ? நீ பெற்ற மக்களோ மாக்களாய் நின்னைத்தேடாது, இந்நிலத்துச் சோம்பேறிகளாய் உறங்குதல் ஆற்றகில்லையோ? நின்னிலமெங்கும் மறுமணம் நாறக்கண்டு நினது கமலக்கண்ணிணையும்,

நுகர்ந்து பெட்புறும் எட்டுநாசியும், கேட்டுச் செந்தமிழ்ச் செவியும் அருவருப்புற்றனவோ? வெள்ளிய மனமும் வெறுப்புற்றதோ? அவ்வணிற் பிள்ளைகளைப் பெற்ற வருத்தம் பொறுக்ககில்லையோ? அதனாற் களைப்புற்றனையோ? அவ்விளைப்பு விடுக்க, நறுஞ்சந்தன மணம் கலந்து வீசும் மெல்லிய தென்றற் காற்றிலே உலா வருதற்கும், மறுமொழிக் கைப்பை நீக்குவான், தமிழ்த் திருச்செவி மாந்துதற்கும் பொதியமாமலைக்குப் போந்தனையோ? "பாலுண் குழவி பசுங்குடர் பொறாதென நோயுண் மருந்து தாயுண்டாங்கு," தண்டமிழ்ப் போகத்தியக் குளிகை பெறச் சென்றனையோ? புலவர் மனமெனும் பொன்னமர் வாவியிற், கற்பனையெனுங் கமலத்திற் றுயிலுதியோ? நறுந்தமிழ் நாவலர் நாவில், நீ மெய்ஞ்ஞான வாணியாய்க் காணி கொண்டிருப்பினும், எங்கும் பரந்து இலங்கும் இயற்கையினள் அன்றோ?

ஐயகோ! அருந்தமிழ் அன்னாய்!! நின்னைப்பின்னுக்கும் நெறிதந்த—தரும்—பித்தரை எற்றுக்குப் பெற்றனை? பேரறிவாளராம் பெரியோர்களை ஈன்ற திருஷ்டி கழிதற்கோ? அல்லது அப்புல்லறிவாளர்கள் சோற்றுக்குக் கேடாகவும் பூமிக்குப் பாரமாகவும் பரந்து, நின்னைப்பறக்க விட்டுப், புறமொழி புரக்கவோ? இன்னுமோ இளைப்பாறுகின்றனை? அன்னாய்! நின்னைப் பண்புறக்காத்த முத்தமிழ் அரசர் எங்கே? இன்னே அன்னோரை அளிப்பாய்! செந்தமிழ் மணம் கமழும் செழுங்கனிவாய் முத்தந்தரும் முதறிஞராய, முத்தமிழ் விரகராம் பாலருவாயர் பலரை, இன்னே தாராயோ? தந்து களிகூராயோ! தமிழ்த்தாயே! இறைவனால், "இறையனாரகப்பொருள்" எனும் இன்சொல்மாலை புனையப்பெறும் இன்பமே! அன்பே! ஆரருளே! உளங்கொண்டு தெள்ளித் தெளிக்கும் பனுவற் புலவோர், கவிமழை சிந்தக்கண்டு களிக்குங், கலாப மயிலே! பாவெனுங் குடம்பையிற் பயிலும் பசுங்கிளியே! தேமரு கடுக்கை வளர் சடைப் பெருமான் திருவுளத்தடமடவனமே! இனித்த சுவைக் கரும்பினும் இனிய நற்றமிழ் மொழியாம், பத்தரை மாற்றுப் பசும் பொன்னுக்கு உரைகல்லெனும், நன்னூல் பன்னூலினும் சிறந்த தொன்னூலை யாத்த தொல்காப்பியனாரையும், பிறங்கு திருமதுரையிற் பிறந்து, மதுரவாயன் என இயம்பப் பெற்ற

மாண்பு மிக்க, உச்சிமேற் புலவர் கொள் உரையாசிரியனும், நச்சினார்க்கினியன் எனும் நறுந்தமிழ்ப் புலவனையும், மெய்த்த திருவள்ளுவனும் மெச்சுபுகழ் நாவலர் போற்றிப்புகழும் நாவலனையும், கல்வியிற் பெரியோனும், சித்திரக்கவிச் சக்ரவர்த்தியும் ஆய கம்பநாடுடைய வள்ளலையும், செம்பொனம்பலவன், "உலகெலாம்" எனும் முதல் அளித்தருளச், செந்தமிழ் மழைக்குஞ் சிந்தூரச் செம்பவள வாயால், சிவமணம் விளையும் செய்யுளிற் "பத்திச் சுவை நனிசொட்டச்சொட்டக்" கல்லுங்கரையத், திருத்தொண்டர் பெரிய புராணம் பாடி, "மின்றதெங்கு நிலவி யுலகெலாம்" என்று திருக்கடைக்காப்பு இட்டருளிய திருமலி குன்றத்தூர்ச் சேக்கிழார் சுவாமிகளையும், தேனும் பாலும் தீங்கன்னலும் அமுதுமாய்த் தித்தித்து, ஊனும் உள்ளமும் உருக்கி, உள் ஒளி பெருக்கும், உலப்பிலா ஆனந்தமாய திருவாசக மெனுந் தீந்தேனினைச் சொரியும், மதிமலி புரிசை மாடக்கூடல் மேய நாயகன் புகழ்தரும், மாணிக்கவாசகப் பெருமானும் நலமலி அமைச்சரையும், குட்டித் திருவாசகக் கோவாம், அருந்தமிழர் கோமான் அதிவீரராம பாண்டியன் எனும் காவலனையும், நாவில் நயந்து பூமாது உறையும், நம்மாழ்வாரும் நாவலனையும், "சிவசம் பந்திடைத் தவஞ்செய்து திரியும் பத்தியிற் சிறந்தவர் திலக" ரும்; சிவபெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சு" டைய சிவ நேசம் பழுத்த செல்வரும், பத்தி பழுத்து ஒழுகப் பரமனையே பாடும், ஞானப் பாடற்றிருடையருச் செந்நாப்போதரும், "தமிழோடு இசை பாடல் மறந்தறி" யாத திருத்தாண்டக வேந்தரும் ஆகிய திருநாவுக்கரசடிகளையும், "நேயமெலாங் குரலையிடத் தமிழ் வேதம் விரித்தரு"ளி, ஆண்பனைகளுக்குப் பழமாகவும், விடத்திற்கு மயிலாகவும், அரும்பிணிக்குப் பெருமருந்தாகவும், உருச் சிதைந்து உதிர்ந்த எலும்பிற்கு உயிராகவும் சிறந்து விளங்கிய செந்தமிழ்ப் பாவலனுய, எமையாளுடைய கோவாம் ஆளுடைய பிள்ளையாரையும், "பண்ணிடைத் தமிழ் ஒப்பாய், பழத்தினிற் சுவை ஒப்பாய்" எனப் பரிந்தழைக்கும் பாவலனும் நன்னாவலர் கோனையும், ஆண்டாளையும் ஔவையையும் காரைக்காலம்மையாரையும், கருதரிய கருவிலே திருவுடைய திருச்சேயர் பிறர்

பலவையும் வெற்ற பெரும் பேற்றினை நினைந்து நினைந்து, நெஞ்சம் புளர்ந்து, அருந்தமிழ் மாமுனி வைகும், பெருந்தமிழ்ப் பொதியமாமலை புக்கு, இருந்தவஞ் செய்தியோ?

ஆண்டு, "முத்தமிழால் அன்று வைதாரையும் வாழவைக்கும்" முத்தமிழ் அளித்த முதல்வனும், "மன்றுதோறாடிய வள்ளல் காமுறக் குன்றுதோறாடிய" குமரவேளைக்கண்டனையோ? கழகமோடமர்ந்து பண்ணுறத் தெரிந்து, பாடுவார் பசிதீர்க்கும் பசுந்தமிழ் ஆராய்ச்சிசெய்த, கண்ணுதற் பெருங்கடவுளாகிய நின் தந்தையாரைக் கண்டனையோ? அமரர்க்கு அருந்தமிழ் அருத்தும் நம் பழந்தமிழ்ப் பாவலரை அழைக்க விழைந்தனையோ? நினக்கு வசனமலர் அருச்சித்து, நின்னை அச்சுவாகனத்து ஏற்றுவித்த வித்தகனும், ஆறுமுகநாவலர் பெருமானைத் தேடி நாடினையோ? நான்காந் தமிழ்ச்சங்கம் நிறுவிய துங்கனும், தண்டமிழ்த்தொண்டு கண்டுவந்த, பண்புடைய பாண்டித்துரையைப் பார்க்கச் சென்றனையோ? எங்களையும் மறந்தனையோ? எந்தாயே!

செம்பரிதியின் நல்வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் செழும் கமலம்போல், எம்மதி முகங்கள் நின் பொன்னிதழ் முத்தம் பெறுதற்கு, நின் நல்வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன. யாம் தமிழ்மறை ஓதுதல் தவிர்கிலம். எங்களால் இயையும் பணி செய்துகொண்டிருக்கின்றனம். எங்கள் உடன் பிறந்தார்களாகிய அம்மறுமொழியாளர்களோடு வாதாடி, அவர் தம் மொழியையும் நந்தமிழ்மொழியையும், இனிது எடுத்து விளக்கிக்காட்டி, விறல் வெற்றிமாலை புனைந்தனம். ஆகலான் அவர்களும் நமது நல்வழிக்கு வந்து, "தேகமே ஆன்மா; போகமே மோக்ஷம்" எனும் புறவுரையும் விடுத்தனர். ஆகலான் யாம் யாவரும் நின்னை ஒரு முகமாக நோக்கும் நற்காலம் வந்துவிட்டது! வருக! வருக!! அன்னாய் வருக!!! வீழியங்கனிவாய் முத்தந்தருக! அருந்தமிழ்ப் பால் அருந்துக! பசிப்பிணியும் தாகமும் பொறுக்ககிலம். அன்னாய் கடிது வருக! சங்கத்தமிழ் மூன்றுந்தருக! பான்மைதரு செய்ய தமிழ் பார்மிசைவிளங்க அருள் தருக!

(தொடரும்.)

சமய வாழ்க்கை.

ஸ்ரீமாந் ச. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள் B.A.,L.T. எழுதியது.

(அ௩-ம் பக்கத் தொடர்ச்சி)

சமய வாழ்க்கையைத் திறமையாய் நடத்திச் சித்திபெற்ற ஞானிக்கு உலகப்பொருள் எதனிடத்தும் விருப்புமிராது; வெறுப்புமிராது. ஆகையால், தனது நலங்குறித்து அவன் பாடுபடவேண்டிய அவசியமில்லை. தனக்கெனக் கர்மமெதுவுஞ் செய்யாதிருப்பது ஞானியானவன் தேடிக்கொண்ட ஓர் உரிமை என்னலாம். இப்பொருளில் ஞானிகள் சோம்பரே. ஆனால் இச்சோம்பர்களாற் பயனில்லை என்று எண்ணல் தவறு. உண்மை ஞானிகள் எந்த நாட்டில் வாழை யடிவாழையாய்த் தோன்றி வருகின்றார்களோ, அந்த நாட்டை நசிவும் அழிவும் நாடமாட்டா. அதன் நாகரிகம் உண்மையான நாகரிகமாயிருக்கும். அடக்க முடியா மனக்குரங்கை அடக்கியாளவல்ல ஞானி அனைவருக்கும் பேருபகாரியே. உற்று நோக்கினாலன்றி இவ்வுண்மை புலப்படாது. எல்லா உயிர்களும் மற்ற எல்லாப்பொருள்களும், ஒன்றோடொன்று பிணிப்புற்றிருந்தலால், ஒருவன் முத்தனாகும்போது, அவனது தூய்மையும் ஆற்றலும் பிற உயிர்களிடத்தும் பொருள்களிடத்தும் சிறிதளவு பதிகின்றன. அவன் பூதவுடம்பை விட்டுப்போன பல்லாயிர வருடங்கட்குப் பின்னும் இந்த நன்மை விளைந்துகொண்டேயிருக்கலாம். மெய்ஞ்ஞானியின் சரிதத்தை நாம் படிக்கும்போதும் கேட்கும்போதும் நம்முள்ளம் உயர்வடைதல் அநுபவ சித்தமே.

இன்னொரு வகையினும் உலகறியாமலே ஞானி உதவக்கூடும். சுவாமி விவேகாநந்தர் சொல்லியபடி, ஒரு மெய்ஞ்ஞானி ஒருகுகையிலிருந்து உலக நன்மை கருதி ஐந்து நல்லெண்ணம் எண்ணுவானாகில், அவை கடலும் மலையும் கடந்து தூயவுள்ளங்களிற் பதிந்து பெரிய ஆசிரியர்களை உண்டாக்கிவிடும். அவர்கள் பலவகைகளில் பரோபகாரஞ் செய்யத் தலைப்படுவார்கள். உண்மையான தேசாபிமானிகளும் பாஷாபிமானிகளும் பிற பெரிய புண்ணியர்களும் இவ்வாறு ஞானியால் ஊக்கப்பெற்று உபகரிப்பவர்கள் என்று கொள்ளலாம். அன்றியும், சிற்சில சந்தர்ப்பங்களில் உலகறியவே ஞானி

உபகரித்தலுண்டு. அரிய நூல்கள் இயற்றி உலகத்தை நல்வழிப் படுத்துதல் ஒரு முறை. உபநிடதம், திருக்குறள், திருவாசகம்—தாயுமானூர், பட்டினத்தார், இயேசுநாதர் முதலியோர் திருவாக்குகள் முதலிய, மக்கட்குப் பெருந்துணையாய் நிற்பது பலரும் அறிந்ததே. இதுவன்றி, அரசியல் ஆசாரத் திருத்தம் சமயத் திருத்தம் என்னும் துறைகளிலும் ஞானி தலையிடக் கூடும். ஞானி கர்மங்களில் தலையிட்டுக்கொள்வானாயினும், கர்ம பலத்தை நாடாது இறைவன் ஏவலின்மேல், காரியங்களைச் செய்தலால் அவனுக்குக் கர்ம பந்தம் ஏற்படுவதில்லை. அவன் கர்மத்தில் அகர்மத்தைக் காண்கின்றான். இத்தகைய ஞானியைத் தலைமையாகக் கொண்ட இயக்கங்கள் நாம் நீடித்த பெரும்பயனைத் தரவல்லவை. இந்நாளில் அத்தகைய நிகழ்ச்சியைக் கண்கூடாகக் காண்கின்றோம்! ஞானியின் தலைமையின் கீழ் நடந்தாலன்றி, அவை நன்னெறியிலேயே நிற்பதரிது; பயனும் சிறந்ததாயிராது.

இது வரையில் சொல்லியதிலிருந்து ஞானியின் உயர்வும் பயனும் மிகப்பெரியன வென்பது விளங்கும். எல்லா மக்களும் முழு ஞானிகளாய் விடுதல் எந்தக்காலத்திலும் நடக்கக்கூடிய காரியமன்று. ஆனாலும் சமயவாழ்க்கையை மேற்கொண்டு மெய்ஞ்ஞானியாக முதிரவேண்டும் என்னும் நோக்கத்தை முற்குறியாக வைத்துக்கொண்டால், அதனால் கீழ்ப்படியிலுள்ள மக்களின் வாழ்க்கையும் மேன்மையுறும் என்பது திண்ணம். "உள்ளுவதெல்லாம் உயர் வுள்ளல்" என்றார் திருவள்ளுவர்.

ஆகையால் இந்த நோக்கத்தின் மேம்பாட்டை உலகிற்கு இனிதெடுத்துக்காட்ட வேண்டும். சமய வாழ்க்கையின் பெருமையையும், உலக நடையின் சிறுமையையும் விளக்க வேண்டும். மேல்நாட்டில் நுட்பமான அறிவு பாதகவழியில் பயன்படுதலைக் கண்டிக்கவேண்டும். பொய் வேடதாரிகளின் போலித்தன்மை தலையெடாதபடி தடுக்கவேண்டும். இவ்வாறு பொது ஜனங்களிடத்தில் நல்லுணர்வை எழுப்புவதோடு, கோயில்குளங்களிலும், மடங்களிலும், சபைகளிலும், பாடசாலைகளிலும் சமயபோதனை எப்போதும் செய்யப்படவேண்டும். கல்விச்சாலைகளில் சமயபோதனை செய்வதைப்பற்றிச் சிறப்புவகையில் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்.

அதிலிருந்து தப்பித்துக்கொள்வது மிகவும் அவசியம். சிலர் சமயப் பாதுகாப்பு செய்யத்தொடங்கி, சத்திழந்த சாத்திரங்களையும் சடங்குகளையும் மதித்துக் கைக்கொள்ளும்படி வற்புறுத்துகின்றனர். அது பயன் தராச்செய்கை; அவசியமானதும் அன்று. பழைய ஏட்டில் உள்ளவெல்லாம் பகவான் வாக்கியம் என்று கொள்ளுதல் முறையாகாது. சில அப்பெருமைக் குரியனவா யிருக்கலாம். உயர்ந்தவை என்று நாம் கொள்ளும் நூல்களையும் சொல்லளவிற் பிடித்துக்கொண்டு மல்லாடல் சரியன்று. அவற்றின் அடிப்படையான கருத்துக்கள், போதனைகள், எவை என்பதைக்கண்டுபிடித்து அதனால் பயனெய்தவேண்டும். சமயச் சடங்குகளையும் ஆசாரங்களையும் சாக்கிரதையாய் அநுசரிக்க வேண்டும். அவை நாளடைவிற் பெருகிவிட்டன. பல, தக்ககாரணங்களோடு ஏற்பட்டவை என்பது உண்மை. ஆயினும் அவற்றிற் பல, கால வேறுபாட்டிற்கு ஏற்றபடி மாறும் இயல்பின. என்றும் அநுசரிக்கத்தக்க இயல்பின சில. ஆசார அநுட்டானங்கள் பெரும்பாலும் காலத்துக்கேற்றவாறு மாறுந்தன்மையன என்பது, நமது முன்னோர்களின் கொள்கையே. யுகத்திற்கு ஒரு மிருதி என்று சொல்லுவதே அதை நிலைநாட்டும். ஆகையால் சமயத்தை வளர்க்க விரும்புவோர் பொருள் தராதனவும் இக்காலத்துக்கு வேண்டாதனவுமாகிய சடங்குகளை சனங்கள் தலையில் சுமத்தக்கூடாது. இக்காலத்திற்கு ஏற்றனவும், சமய வாழ்க்கைக்கு இன்றியமையாதனவுமாகிய சில முக்கிய ஆசார அநுட்டானங்களை அறிஞர் தேர்ந்தெடுக்க வேண்டும். அவற்றை அநுட்டிக்க வேண்டியதின் அவசியத்தைக் கூடிய வரையில் காரணங்காட்டி விளக்க வேண்டும். சடங்குகள் அடியோடில்லாமல் சமய வாழ்க்கை உரம்பெறாது. ஆனால், சடங்குகளுக்கு அளவுக்கு மிஞ்சிய பெருமை தரக்கூடாது. சமயம் சடங்கிலில்லை; சாத்திரத்தில் இல்லை. செம்பொருட் காட்சியிலும் சீரிய அன்பு வாழ்க்கையிலுமே உயிர் வைத்திருக்கின்றது.

இவ்வுண்மைகளை மனத்துட்கொண்டு தலைவர்கள் வேண்டிய திருத்தங்கள் செய்யவேண்டுவது இந்நாளில் மிக அவசியமாய்க் காண்கின்றது. தற்கால உலகப் பிணிக்கு மருந்து சமய வாழ்க்

கையே. அது விரைவில் தயாரித்துக் கொடுக்கப் பட்டால்தான் இப்போது மிகுந்துள்ள பசியும், பிணியும், பகையும், பயமும், செல்வச் செருக்கும், தீமையின் வலுவும் குறையும். பொய் நாகரிகம்போக, மெய் நாகரிகம் மேம்படும். "நாகரிகம்" என்னும் இச் சொல் பெரிதும் ஆளப்படுதலால் உண்மை நாகரிகம் இன்ன தன்மையது என்பதை ஒருபெரியார் மொழிபால்விளக்கி இக் கட்டுரையை முடிக்கலாம்.

உண்மை நாகரிக இயல்பை Sir John Woodroff (ஸர்ஜான் வுட்ராப்) பின்வருமாறு குறிக்கின்றார். "That then is true civileisation which, recognising God as to beginning & its end organises men in society through their material and mental vehicles with a view to the manifestation of Sprit in its forms as true morality and true religion" இதன்மொழிபெயர்ப்பு:—"கடவுளே தனக்கு ஆதியும் அந்தமும் என்றுணர்ந்து உண்மை நல்லொழுக்கம் மெய்ச்சமயம் என்பவற்றின் மூலமாய் ஆன்ம சொரூபம் பிரகாசிக்க வேண்டும் என்னும் நோக்கத்தைக் கொண்டு மக்களின் அகக்கருவி புறக்கருவிகளின் மூலமாய் அவர்களைத் தகுதிக்கேற்றபடி இனப்படுத்தி அமைத்தலே உண்மையான நாகரிகம் எனப்படும்"

இந்த உண்மை நாகரிகம் உலகில் பரவுதற்குச் சமயவாழ்க்கை இன்றியமையாதது. ஆதலால் ஒவ்வொருவரும் தாம் தாம் பிறந்த சமயத்தின் கொள்கையில், மேல்விவரித்த சமயவாழ்க்கை இலக்கணங்கள் இருக்கப்பார்த்துக்கொள்ள வேண்டும். அதனோடு அவ்விலக்கணங்கள் தம் வாழ்க்கையில் மேன்மேல் பதியுமாறு முயற்சி செய்யவேண்டும். இங்ஙனம் செய்யின், இல்வாழ்க்கை அன்பையும் அறனையும் உடையதாகும். துறவிகள் பெருந்தூய்மையுடையராய் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணராவர். இப்பெரு நலங்களுக்கெல்லாம் பிறப்பிடமாகிய சமய வாழ்க்கை தற்கால மக்களின் மனதைக் கவர்ந்து என்றும் இன்பம் பெருகுமாறு செய்விக்க இறைவன் துணைபுரிக.

வீரகாகளம்.

(வெற்றி வீரன் எழுதுகிறார்.)

பாரதத்திலே தலைமை பெற்று விளங்கும் பெண் துரோபதை. இந்த மாதரசி பஞ்சாபிலே பிறந்தவள். துரோபதையின் தகப்பனான துருபதேய மகாராஜன் அர்ஜுனனுடைய வீரத்தைக் கண்டு மகிழ்ந்து அவனைத் தனது மருமகனாக்கிக்கொள்ள வெண்ணினான். தவம்புரிந்தான். தவமகிமையினாலே இந்தக்கற்பரசியைப் பெற்றான். அப்படியே சுத்த வீரனான அர்ச்சுனன் மணஞ்செய்து கொண்டான். சில வருஷங்கள் சென்றன. துரியோதனனானவன் பாண்டவரின் செல்வத்தில் பொறாமை கொண்டான். விருந்துக்கு அழைத்தான். பாண்டவர் ஐவரும் துரோபதையும் அஸ்தினாபுரம் சென்றார்கள். விருந்துண்டார்கள். உண்டு களித்திருக்கும்போது பாவி துரியோதனன் துரோபதையைச்சபைக்குக் கொண்டுவரச் செய்தான். நூற்றுக்கணக்கான ராஜாக்கள் கூடியிருந்த ராஜசபையிலே பட்டமகிஷியான துரோபதையைக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். துச்சாதனன் என்ற கல்நெஞ்சன் அந்தப் பெண்ணினுடைய துகிலைக் களைந்தான். அவளுக்கு வேறு துணை செய்வார் யாருமில்லை. எல்லாம் வல்ல கடவுளைத் துதித்தாள். சேலை வளர்ந்து கொண்டேயிருந்தது. உரிந்தவனும் கைசலித்தான். மண்டபமுங் கொள்ளவில்லை. இந்த சமயத்தில் "இவளைத் தூக்கியென் தொடை மேலே வை" என்றான் துரியோதனக் கசடன். பஞ்ச பாண்டவரும் அரசர்களும் பெரிய மனிதரும் வாய்மூடி மௌனியாக விருந்தனர். இது அநியாயமென்று தடுப்பதற்கு யாருமில்லாதுபோன அந்த இடத்திலே—பொட்டையன் மகன் குருட்டு நெறிபற்றி நாடு புரக்கும் அந்த இடத்திலே—துரோபதையென்ன செய்தாள் தெரியுமா? "என்னைத் தூக்கி இருத்தும்படி சொன்ன தொடையிலே கழுக்கள் பிடுங்கட்டும்; என்னை இந்த சபையிலேற்றி மானபங்கஞ் செய்ய முயன்ற இவர்களை யுத்தகளத்திலே கொன்று தீர்த்த பின்னரே விரித்த கூந்தலை

முடிப்பேன்" என்று சபதமிட்டாள். அப்படியே இருந்தாள். என்ன வீரம்! என்ன உறுதி! இம்மாதிரியான வீர ரத்தினங்களன்றோ வேண்டும். கற்பு நெறி தவறாத பெண் மக்கள்—கடவுளை நம்பிய பெண் மக்கள்—அறிவுள்ள பெண்மக்கள்—வீரம் பொருந்திய பெண் மக்கள்—இவர்களாலேதான் நாட்டுக்கு விமோசனமுண்டாதல் வேண்டும்.

*　*　*

மதுரையிலே வணிக குலத்தில் மூர்த்தி நாயனர் என்றொருவர் பிறந்திருந்தார். இப்பெரியார் சிறந்தசிவபக்தர். சிவபெருமானுக்குச் செய்யும் திருத்தொண்டைத் தவிர உலகிற் பெறும் பேறு வேறொன்றுமில்லையென்று கண்டார். அத்திருத்தொண்டு பலவற்றுள் அவர் முதன்மையாகக் கொண்டது சந்தனம் அரைத்துக் கொடுக்கும் பணியாகும். பலநாள் இப்பணியைச் செய்து வந்தார். சிலகாலமானபின்னர் வடநாட்டரசனொருவன் யுத்தஞ் செய்து மதுரையைப் பிடித்தான். அவன் அந்நிய மதத்தினனுதலால், இவர் செய்யும் தொண்டை விரும்பவில்லை. அரசன் சிவன் பணியை விரும்பவில்லையென்றறிந்த சுபல வியாபாரிகள் நமது நாயனருக்குச் சந்தனக் கட்டை கொடுக்க முடியாதென்று மறுத்து விட்டனர். நாயனர் எங்குஞ் சென்றார். சந்தனக் கட்டை கிடைக்கவில்லை. அதற்காக என்ன செய்தார்? கட்டை கிடைக்கவில்லையேயென்று வீட்டில் சும்மாவிருந்தாரா? இல்லை. "சந்தனம் அரைத்துக் கொடுப்பது தமது கடமையென்று கொண்டார். அது நிற்க வேண்டி நேர்ந்துவிட்டது. ஆதலால் நமது கையைக் கல்லிலிட்டு அரைப்பேன்" என்று எழுந்தார். சந்தனக்கல்லிலே முழங்கையை வைத்து அரைத்தார். பார்த்தீர்களா! இவரது வீரமெப்படியிருக்கிறது! தன் கொள்கை நிறைவேற வேண்டும். இல்லையேல் தன்னை ஊறு படுத்தியாவது காரியத்தைச் சாதிக்க வேண்டும்" என்பது இவர் கொள்கை. யாது நேரினும் கொண்ட காரியத்தை விடாது சாதிப்பவரே வீராவர். இவ்வளவு பிடிவாதமுள்ள மக்கள் சைவ உலகத்தில் இப்போது எத்தனை பேரிருக்கின்றனர்?

பழமொழிக் களஞ்சியம்.

(முதுமொழிக்காஞ்சியார் எழுதியது.)

ஆயிரக்கணக்கான வருஷங்களாக மனிதர் வாழ்வில் துன்பம் கலந்துகிடக்கிறது. அந்தத் துன்பவாழ்க்கை வர வர பலமடைந்து தற்போது ஆபத்திற் கொண்டுவந்து விட்டிருக்கிறது. இந்த நிலையை நீக்கி இன்பவாழ்க்கையை—சுதந்திரவாழ்க்கையை—இடிப் பற்ற வாழ்க்கையை மக்களுக்குத் தருவதற்குப் பல பெரியார் முயன்று வருகின்றனர். இதற்கிடையில் முட்டுக்கட்டைகள் மாதிரி சிலர் கிடந்து கேடுசெய்து வருகின்றனர். இதனாலேயே சில சமயந் தோல்வியுற்றும் சில சமயம் வெற்றிபெற்றும் உயர்ந்த கொள்கைகள் இயங்கி வருகின்றன. இதனை யறியாத ஜனங்கள் "செய்த காரியம் என்ன பலனைத்தந்தது" என்று கேள்வி போடு கின்றனர். பாவம்! இவர்களுக்கு மாங்கொட்டை போட்டவுடன் மாம்பழம் வேண்டும். என்னசெய்கிறது? காலம் வந்துதானே பழுக்கும். இது விளங்காமல் வேலையைச் சரியாகச் செய்யுமுன் னர் பலனை எதிர்பார்த்தால் கிடைக்குமா? "அரசமரத்தை ஒரு சுற்றுச் சுற்றினளாம் அடிவயிற்றைத் தடவிப்பார்த்தளாம்"

* * *

மனிதர்கள் காரணமிருந்தோ இல்லாமலோ சிலரிடம் நேசங் கொள்கின்றனர். நேசங்கொண்டு மனமொத்துவிட்டால் அவர்கள் என்ன செய்தபோதிலுங்குற்றமாகத் தோற்றுகிறதில்லை. தலையில் ஏறிமிதித்தாலும் வேறு எப்படிச் செய்தாலும் அதற்குத்தக்க காரணமிருக்குமென்றுகூறித் தாங்களாகவே சமாதானமுஞ்செய்து கொள்கின்றனர். இப்படியே அறிந்தோ அறியாமலோ சிலரிடந் துவேஷங்கொண்டுவிட்டால், அவர் செய்வது எத்தனை நியாயமா யிருந்தாலும் எத்தனை முக்கியமானதா யிருந்தாலும் அதற்கு ஏதையாவது சொல்லிக் குற்றங்கற்பிக்க ஆரம்பித்து விடுகிறார்

கள். அப்படியும் முடியாவிட்டால் காரியம் நல்லதுதான்; எனக்கு அதில் இஷ்டமில்லை யென்று கம்பீரமாகக் கூறுகிறார்கள். யார் எதை விரும்பினாலும் வெறுத்தாலும் இறைவன் செயலின்றம் அணுவளவும் அசைந்து நடக்கப்போவதில்லை. ஒருவருக்கு ஒருவர் அநாவசியமாக அடங்கி நடக்க அவசியமுமில்லை. உலகத்தில் "எறும்புந் தன்கையால் எண்சாண்"

* * *

உலகத்திலுள்ள மக்களில் எவரும் தவறு செய்யாதிருப்பதில்லை. மூடத்தனமென்பது எல்லாருக்கும் பொதுவானது. எவரும் மூடத்தனத்தில் எப்போதாவது கலந்து விடுகின்றனர். முற்றறிவுடையவன் கடவுள் ஒருவர்தான். இதனைச் சில சகோதரர் என்னுகிறார்களில்லை. தாங்கள்தாம் தவறு செய்வதில்லை யென்றும், முற்றிய அறிவாளியென்றும் கருதிவிடுகின்றனர். இப்படிக் கருதுவதே அறியாமையாகுமன்றோ? தவறு எங்குந்தான் இருக்கின்றது "கருப்பட்டியிலும் கல்லுக்கிடக்கும்".

* * *

எவ்வளவு புத்திமானாயிருந்தாலும் கல்விமானாயிருந்தாலும் செல்வவானாயிருந்தாலும் முடியாது. ஒரு காரியத்தைச் செய்வதானால் காலத்தின் பலம் கட்டாயம் வேண்டும். ஒரு காரியத்தில் தலையிட்டுச் செய்வதானால், இடம் நோக்கி—தன்பலம் நோக்கி—யார் எதிர்க்கக்கூடுமென்பதை நோக்கி—செய்யப்போகிற காரியம் பயனுடையதா கேடில்லையா வென்பதை நோக்கி—நேசர்களியாவரையும் சேர்த்துக்கொண்டு ஆரம்பித்தல் வேண்டும். ஆனால் இத்தனையும் செம்மையாயிருப்பினும் வினை செய்வதற்கேற்ற காலமில்லாவிட்டால் செய்யுங் காரியம் அப்படியே பாழ்பட்டுப் போய் விடும். காலத்தையறிந்து, வெல்கிற காலமாயிருந்தால் தொட்டதெல்லாம் வெல்லும். கெடுகிற காலமாயிருந்தாலும் அப்படியே தான். ஆனால் காலத்தின் போக்கையறிந்து தன் நிலையையறிந்து பலத்தையறிந்து காரியங்களை நடத்திக்கொண்டு போதல் வேண்டும். "காலமறிந்து நடவாதான் கோலமழிந்து தூங்காவான்."

சதங்கையொலி.

பயனுள்ள பட்டம்.

முற்காலத்தில் அரசர்களும், மடாதிபதிகளும், அறிஞர்களும் உயர்ந்த மக்களுக்குப் பட்டம் கொடுப்பதுண்டு. பட்டம் பெற்றவர்கள் பரம்பரையாகக் கஞ்சிக்கலையாமல் சுகமாக வாழ்வதற்கு கிராமங்களை சர்வ மானியமாக விட்டுக்கொடுப்பது வழக்கம். இப்போது பெரும்பாலாகப் பட்டம் பெறுபவர்கட்கு விடிந்தெழுந்தால் செலவுதான் அதிகமாயிருக்கிறது. இப்போது சாரதா பீடத்து சங்கராச்சாரியார் ஸ்ரீ பாரதி கிருஷ்ண தீர்த்த சுவாமிகள், நெல்லூர் வாசியான பண்டிதர் பிம்மஸ்ரீ வேதம் வேங்கடராம சாஸ்திரியாருக்கு "ஸநாதன தர்ம ரத்நாகர மகாமகோபாத்யாய சர்வதந்திர ஸ்வதந்திர வேதவேதாங்க சாஸ்திரஜால மகோததி வித்யாதான விரத மகோததியானந்த பண்டித ராஜர்" என்ற பட்டத்தையும் பரம்பரையாகமாதம் கரு௦ ரூபாவீதம் பொருளுதவியையும் அளித்துள்ளார்கள். கற்றவர்களை மதிக்கச் செய்வதும் ஆதரிப்பதும் பொருளுதவுவதுமான இம்மாதிரிப் பயனுள்ள பட்டங்கள் கொடுப்பது போற்றற்குரியதாகும். ஆனால் பட்டம் வெகு நீளமாயிருக்கிறது.

தத்வ சம்வாதம்.

இது மகாத்மா காந்தியடிகளை மான்செஸ்டர் கார்டியன் என்ற பத்திரிகைப் பிரதிநிதி கண்டு பேசிய விஷயங்களடங்கிய ஒரு சிறு மொழிபெயர்ப்பு நூல். இந்நூல் சிறிதாயினும் இதனைப் படிப்பவர்கள் மகாத்மாவின் கொள்கை யாதென்பதை எளிதாக உணர்ந்து கொள்ளலாம். இப்புத்தகத்திலுள்ள மகாத்மாவின் மொழிகள் உள்ளத்தை உருக்குகின்றன. இச்சிறு நூலை வாங்கி யெங்கும் பரப்பலாம். இதன் விலை அரையணா. நூறு பிரதிகள் இரண்டேகால் ரூபா. "விநோதினி ஆபீஸ், வேப்பேரி சென்னை.

இது நல்ல முறை.

சமீபத்தில் நடைபெற்ற மலையாளக் குழப்பத்தின் போது பலவந்தமாக இஸ்லாம் மதத்திற் சேர்க்கப் பெற்ற ஹிந்துக்கள் பஞ்ச கவ்வியம் சாப்பிட்டு விட்டுச் சிவநாமத்தையாவது, நாராயண நாமத்தையாவது ஜெபம் செய்வதே போதிய பிராயச்சித்தமாகும் என்று கள்ளிக்கோட்டைத் தம்பிரான் ராஜா அவர்களும் பல வைதிகர்களும் தீர்மானித்திருக்கிறார்கள். இது ஒரு நல்ல முறையாகும். முன் ஒரு நண்பர் ஐயாயிரம் ரூபாய்கள் செலவு செய்து பிராயச்சித்தஞ் செய்து கொண்டது நமக்கு ஞாபகம் வருகிறது. அவ்வாறு அதிகத் தொகை செலவு செய்வது வீண் செலவும் வீண் சிரமமும் எல்லோராலும் இயலாத காரியமும் ஆகும். முன் சமண் சமயம் புகுந்த அப்பர் சுவாமிகளைச் சைவசமயத்திற்கு அழைத்துக் கொண்ட பொழுது, அவர்களுடைய தமக்கையாராகிய திலகவதியார் திருநீற்றைத்தான் அள்ளிக் கொடுத்தார்கள் என்பதையும் ஈண்டு நாம் ஞாபகப்படுத்துகிறோம்.

அருமருந்து.

இந்நகரில் மெய்யம்மை ஆச்சியார் எனும் பெரிய சிவ பக்த சிகாமணியார் ஒருவர் இருக்கிறார்கள். அவர்கள், பூசைக்கார ஆச்சி என்று எல்லோராலும் அழைக்கப் பெறுகிறார்கள். அவர்கள் ஆண்டவனிடத்தும் அடியார்களாகிய அறுபத்து மூன்று நாயன்மார்களிடத்தும் விசேட பக்தி கொண்டுள்ளார்கள். நாளிதுமீ ௩௨ சனிக்கிழமை காலை ௭-மணிக்கு அவர்களுடைய வலதுகை நடுவிரலில் பாம்பு கடித்து விட்டது. கடிபட்ட இடத்தில் இரத்தம் பெருகிக் கொண்டிருந்தது. அப்பொழுது அவ்வம்மையார் மந்திரவாதிகளைத் தேடி ஓடினாரில்லை. வைத்தியனை நாடினாரில்லை. மற்ற அன்பர்கள் அவர்களை வரவழைக்க விரும்பிய பொழுதும், "நமக்கு ஆண்டவன் அருள் பூரணமாக இருக்கிறது!" என்று சொல்லிவிட்டு, விபூதியை எடுத்துப் பாம்பு கடித்த இடத்தில் தடவினார்கள். திருஞான சம்பந்தப் பெருமானார் திருவாய்மலர்ந்தருளிய, "மந்திரமாவது நீறு" என்னும் திருநீற்றுத் திருப்பதிகத்தைப் பன்முறை ஓதினார்கள். பாம்புகடி பறந்து போயிற்று! நம்பன் அடியவர்க்கு நஞ்சும் அமுதாகுமன்றோ? பிறகு அப்பாம்பைப் பார்த்த சிலர் அதனை அடிக்க விரும்பியபொழுதும், "அதனை அடித்தல் கூடவே கூடாது" என்று சொல்லிவிட்டார்கள்! அடியார்தம் அல்லல் தீர்க்கும் அருமருந்தாகிய திருநீற்றின் அருமையையும், தேவாரத் திருப்பதிகத்தின் பெருமையையும் அம்மாது சிரோமணியாரின் திடபக்தியையும் நாஸ்திகம் பேசுவார் உணர்வார்களா?

முப்பொருளுண்மை.

(குட்டிச்சாத்தன் A. B. C. D. E. F. etc எழுதியது.)

பிரமபத்திரனர்:—என்னுடைய பெருமையையுங் குணத்தையும் என்னாலே கூடச் சொல்லமுடியாது. என்னை யாராவது நேசங்கொண்டு பழகிவிட்டால் அவர்கள் எப்படிப்போனாலும் நான் அவர்களை விட்டுப்பிரியவே மாட்டேன். பல்வலியை வரவொட்டாது தடுப்பேன். நான் வாயிலே புகுந்துவிட்டால் அவர்களுக்குத் தேவலோகத்து இன்பத்தைக் கைமேலேகாட்டுவேன். என்னை ராஜாக்களும் ஜமீன்தார்களும் பெண்களும் மற்றும் பலரும் தங்கப்பெட்டியில் வைத்துப் பூட்டுகிறார்கள். எனது நேசர்கட்கு நானில்லாவிட்டால் கிறுக்குப்பிடித்துப் போகும்.

புகைச்சுருட்டன்:—என்பெருமையைப்பற்றிக் கூறவேண்டியதில்லை. என்னைத்தான் தற்காலத்தில் ராஜாதிராஜாக்களும் வாயில்வைத்துச் சுவைக்கிறார்கள். கூதலுக்கு நான் தான் ராஜா! என்னை வாயிலே வைத்துக்கொண்டு தீயையை கிமிர்த்தி ஒரு இழுப்பு இழுத்தால் சுவர்க்கலோகம் நேரே தெரியாதா? நாலு பெரியபிரபுக்கள் இருக்கிற இடத்தில்—ஐரோப்பியர் இருக்கிற நாகரிகமான இடத்தில் என்னை வாயில் வைத்திழுத்துக்கொண்டு போகாவிட்டால் மரியாதையேது?

பொடியன்:—எனக்குப் பேர் சிறியநாயிருந்தாலும் வேலையிலே நான்தான் கைகாரன். மண்டுவாக இருக்கிற ஆட்களைக்கூட நான் புரட்டிவிடுவேன். மூக்கின் வழியாக நான் புகுந்து விட்டால் மூளையைப்பற்றிக் கடசல் வேலைசெய்து அறிவைப்பக்குவப்படுத்தி வேலையிலே உற்சாகமுண்டாக்கிவிடுவேன். இதனையறிந்துதான் பலர் என்னோடு நேசங்கொண்டு என்னை மறவாதிருக்கின்றனர். எனதுநண்பர்கள், மனைவி, மக்கள், பொருள், வாழ்வு, எல்லாவற்றையும் மறந்தாலும் என்னைமட்டும் ஒரு நிமிஷங்கூட மறக்கமாட்டார்கள். இதனாலே நான் எவ்வளவு பயனுள்ள சிநேகிதன் என்பதை நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்.

ஆசாரன்:—பல நண்பர்கள் வாயிலே புகையிலையை வைத்துத்திணித்துக்கொண்டு "புளிச்சுப் புளிச்சு" என்று கண்டவிடமெலாக் துப்பி நாற அடிக்கிறார்கள். இன்னுஞ் சிலர் அமிர்த கலசத்தை யெதிரே வைத்துக்கொண்டு அதை நிரப்பி, வருபவர்க்கு நிவேதிக்கிறார்கள். சிலர் வாய் நிறையப் புகையிலை யெச்சலை வைத்துக்கொண்டு கொள கொளவென்று ஜலதரங்கம் வாசிக்கிறார்கள். சுருட்டுக்குடிப்பவர்களைப் பற்றிச்சொல்ல வேண்டியதேயில்லை. புகைச்சுருட்டை வாயிலேவைத்துக்கொண்டு ஊது ஊதென்று ஊதுகிறார்கள். அந்த சாம்பிராணித் தூபத்தை மூக்கிலே பிடித்தால் வயாலெடுக்க வருகிறது. புகைகுடித்தவர்கள் கிட்ட வந்தால் வாய் நாற்றம் குடலைப்பிடுங்குகிறது. புகைகுடித்தவர்கட்கு நெஞ்சு கூடுகெட்டிப்போகிறது. ஈரல் கருகிவிடுகிறது. பொடிவியாபாரமே மிகப்பெருங்கேடாயிருக்கிறது. இவர்கள் கிறுக்குப் பிடித்தவர்களாயிருக்கின்றனர். கால்நாழிகை நேரமாவது பொடியில்லாவிட்டால் இவர்கள் புத்தி ஒன்றிலும் செல்லாது. இந்தப்பொடி, மூக்கை வழியாகக்கொண்டு மண்டையில் ஏறிக் குடை குடையென்று குடைய்வாரம்பிக்கிறது. மூளையிலே பொடி வீசைக்கணக்காக ஏறுகிறது. வாணக்குழாயில் வெடிமருந்து வைத்துக் கிட்டிப்பது போல மூக்கிலேபொடியை வைத்துக் கிட்டிக்கிறார்கள். அது மூளையைக் கெடுத்து சுவாசக்குழலைக் கெடுத்து விடுகிறது. அங்கக்கேதும்பசோணம் ஊறுகாய்மண்டிமாதிரியான இவர்களுடைய மூக்குச்சளியைச் சிந்தி விடுகிறார்கள். எப்படியும் இந்த மூன்று சனியனும் தொலைந்தால் நான் உருப்படியாவேன்.

காரைக்குடி தனவைசிய ஊழியன் அச்சியந்திரசாலையில் அச்சிடப்பெற்று
சொ. முருகப்ப செட்டியாரால் பிரசுரஞ் செய்யப்பெற்றது.